

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஏப்ரல் 19, 2018 | புரட்சி 17 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

## சர்வதேசமே கண்டிக்கும் சங்பரிவார் மதவெறி

# கோயிலுக்குள் சிறுமியின் கோரக் கொலை

*ஜம்மு மாநிலத்தில் கோயிலுக்குள் அசீஃபா எனும் எட்டு வயது சிறுமி பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு நாட்டையே அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறது.*

ஜம்மு காஷ்மீரிலுள்ள கதுவாவில் பலாத்காரம் செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டிருக்கிறாள் எட்டு வயது சிறுமி (ஆசிஃபா). கிராமத்தின் மையத்தில் உள்ள ஒரு கோயிலில் ஒரு வாரம் அடைத்து வைத்து, தொடர்ந்து மயக்க மருந்து கொடுத்து வன்புணர்ச்சி செய்திருக்கிறார்கள். அதில் காவலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதற்கு காவல் துறையினரும் துணை நின்றிருக்கிறார்கள்.

காஷ்மீரத்தின் குளிர்காலத் தலைநகரான ஜம்முவிலிருந்து 88 கி.மீ. தொலைவில் உள்ள கதுவாவுக்கு அருகே ரசனா கிராமத்தைச் சேர்ந்தவள் அந்தக் குழந்தை. அவளது வளர்ப்புத் தந்தை முகமது யூசுப் புஜ்வாலா, பக்கர்வால் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆடு, மாடு, குதிரை மேய்க்கும் நாடோடி சமூகம் இது. மதத்தால் இஸ்லாமியர். இந்தச் சமூகத்தினரை அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில், ஜம்முவில் பெரும்பான்மையாக வசிப்பவர்களில் ஒரு தரப்பினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்திருக்கிறார்கள். இதில் தீவிரமாக ஈடுபட்டுவந்த சஞ்சிராம்தான் பிரதான குற்றவாளி. அவரது கட்டுப்பாட்டில் இருக்கும் கோயிலில் வைத்துதான் அச்சிறுமி வன்புணர்ச்சி செய்து கொல்லப்பட்டிருக்கிறாள்.

ஜனவரி 10 அன்று, தங்கள் குதிரைகளைத் தேடிக் கொண்டு அருகில் உள்ள காட்டுக்குச் சென்ற சிறுமியை, சஞ்சிராம் தலைமையிலான கும்பல் கடத்திச்சென்று கோயிலில் அடைத்து வைத்தது. மீரட்டிலிருக்கும் தன் நண்பனை அழைத்து இந்த வன்புணர்ச்சியில் பங்கேற்க வைத்திருக்கிறான் சஞ்சிராம். இறுதியில், அவளைக் கொல்ல முடிவெடுத்தவர்கள், உள்ளூர் காவல்துறை தீபக் கஜோரியாவிடம் யோசனை கேட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்போது தானும் அந்தச் சிறுமியைப் பலாத்காரம் செய்ய விரும்புவதாகச் சொன்ன தீபக், அந்தப் பாதகத்தைச் செய்தான் என்கிறது காவல் துறை.

பின்னர், நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்குக் கோரமான முறையில் அச்சிறுமி கொல்லப்பட்டாள். சிறுமியைக் காணவில்லை என்று அவளது குடும்பத்தினர் காவல்துறையை அணுகியபோது, “யாருடனாவது ஓடிப் போயிருப்பாள்” என்று அங்கிருந்த காவலர் ஒருவர் சொன்னாராம். சஞ்சிராம் கும்பல், உள்ளூர் காவல்துறைக்கு இலஞ்சம் கொடுத்துச் சரிகட்டி விட்டது விசாரணையில் தெரியவந்திருக்கிறது. ஒரு பக்கம், விஷமப் புன்னகையுடன் காவல்துறை தேடுதல் நாடகம் நடத்திக்கொண்டிருக்க, மறுபக்கம் பரிதவிப்புடன் அவளது குடும்பத்தினர் தேடியலைந்திருக்கிறார்கள். “உண்மையில், ஏதோ விலங்கு அடித்துக் கொன்றிருக்கும் என்றுதான் நினைத்தேன். இப்படிச் செய்வார்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை” என்று கதறுகிறார் புஜ்வாலா. இது தொடர்பாக, எட்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நான்கு பேர் காவல்துறை அதிகாரிகள், ஒருவன் சிறுவன். முதன்மைக் குற்றவாளியான சஞ்சிராம் ஓய்வுபெற்ற அரசு ஊழியராம். மரணத்துக்குப் பின்னும் அந்தச் சிறுமிக்கு கொடுமை நேர்ந்திருக்கிறது. தங்களது நிலத்தில் அவளது சடலத்தை அடக்கம் செய்ய உறவினர்கள் சென்ற போது இந்துத்துவ அமைப்பினர் தகராறு செய்திருக்கிறார்கள். இதையடுத்து, ஏழு மைல்கள் நடந்து சென்று இன்னொரு கிராமத்தில் இறுதிச் சடங்கை நடத்தியிருக்கிறார்கள்.

சம்பவம் நடந்து மூன்று மாதங்களுக்குப் பின் காவல் துறை குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்த பிறகுதான் இது தேசியச் செய்தியாகியிருக் கிறது. அதிர்ச்சியளிக்கும் இன்னொரு விஷயம், காஷ்மீரில் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் பாஜக இந்தப் பிரச் சினையில் குற்றவாளிகளுக்கு ஆதரவாகவே செயல்படுவதுதான். குற்றவாளிகளுக்கு ஆதரவாக இந்துத்துவ அமைப்பினர் பேரணி நடத்தியிருக் கிறார்கள். பேரணியில் கலந்து கொண்டவர்கள் தேசியக் கொடி ஏந்திச் சென்றிருக் கிறார்கள்.

இந்த வழக்கில் காவல் துறை அதிகாரிகள் ஏப்ரல் 9 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யச் சென்றபோது நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தடுக்க முயன்றிருக்கின்றனர்.

குற்றவாளிகளுக்கு ஆதரவாக வெளிப் படையாக செயல்பட்ட ஜம்மு-காஷ்மீர் கூட்டணி ஆட்சியில் பா.ஜ.க. அமைச்சர்களாக இருந்த சவுத்திரிலால் சிங், சந்தர் பிரகாஷ் கங்கா இருவரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளனர். குற்றவாளிக்கு ஆதரவாக நடந்த பேரணியில் இவர்கள் பங்கேற்றனர். ‘இந்து ஏக்தா மஞ்ச்’ என்ற சங்பரிவார் அமைப்பு இந்தப் பேரணியை நடத்தியது.

‘கட்சியின் கட்டளையை ஏற்றே பேரணியில் கலந்து கொண்டேன்’ என்று பதவி விலகல் கடிதத்தை மாநில பா.ஜ.க. தலைவரிடம் அளித்த சந்தர் பிரகாஷ் கங்கா கூறினார். ‘ஆனாலும் பிரதமர் கட்சியின் நற்பெயரைக் காப்பாற்றுவதற்காகவே பதவி விலகுகிறேன்’ என்றும் கூறியுள்ளார்.

மறுபுறம், உ,பி.யின் உனாவ் பகுதியில் 17 வயது சிறுமியைப் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டப்படும் பாஜக எம்எல்ஏ-வை பாஜக அரசின் காவல் துறை கைது செய்யவே இல்லை. அவரைக் காப்பாற்ற உள்ளூர் பாஜக உறுப்பினர்கள் களம் இறங்கினார்கள். அந்தச் சிறுமியின் தந்தை சிறையில் அடைக்கப்பட்டு மர்மமான முறையில் மரணமடைந் திருக்கிறார். நீண்ட போராட்டங்களுக்குப் பின் வழக்கு சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது. சிபிஐதான் எம்.எல்.ஏ.வைக் கைது செய்தது. “இந்தியாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களில் பெண் களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்களில் அதிகமானோர் பா.ஜ.க-வினர்” என்கிற ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏ.டி.ஆர்.) வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரம் இந்தச் சூழலில் முக்கியத்துவம் பெறுகிறது.

### ‘கதுவா’ கொடூரம்: அய்.நா. பொதுச்செயலாளர் கண்டனம்

கதுவா, பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலக முன் வந்திருப்பதற்குக் காரணம், பிரச்சினை அய்.நா. மன்றம் வரை எதிரொலித்தது தான்.

“கதுவாவில் 8 வயது சிறுமி, 8 பேர் கொண்ட கும்பலால் பாலுறவு வன்முறைக்கு உள்ளாகிய சம்பவம் கொடூரமானது. குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கி, நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது” என்று அய்.நா.வின் பொதுச் செயலாளர் அன்டோனியோ கட்டரஸ் கூறி யுள்ளார். கதுவா கொடூரம் இந்தியாவில் மட்டுமின்றி சர்வதேச ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாகிவிட்டது.

அய்.நா. பொதுச் செயலாளர் தெரிவித்த இந்த கருத்து குறித்து, அவரது அதிகாரபூர்வ பேச்சாளர் டுஜாரிக்கிடம் செய்தியாளர் கேட்டனர். குற்றவாளிகள் மீது இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அய்.நா.வின் பொதுச் செயலாளர் கண்டனத்துக்குப் பிறகுதான் பா.ஜ.க. இறங்கி வந்து அமைச்சர்களை பதவி விலகச் செய்திருக்கிறது.

## ‘வன்புணர்ச்சி’ குற்றவாளிகளான பார்ப்பனர்களின் மிரட்டலுக்கு பணியாது உறுதியுடன் செயல்பட்ட காவல்துறை பெண் அதிகாரி

*ஆசிஃபா வன்புணர்வு கொலை வழக்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவின் ஒரே பெண் அதிகாரியான திருமதி. ஷ்வேதாம்பரி ஷர்மா பேட்டியின் ஒரு பகுதி.*

“குற்றவாளிகளில் பெரும்பாலோர் ‘பிராமணர்’களாக இருக்கிறார்கள். நாமெல்லாம் ஒரே ஜாதியைச் சார்ந்தவர்கள், ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள்... ஒரு முஸ்லிம் பெண்ணின் வன்புணர்வுக் கொலையில் நமது ‘பிராமணர்’களை குற்றவாளிகளாகக் காட்டக் கூடாதென பல வழிகளில் எனக்கு அழுத்தம் கொடுத்தார்கள். ஒரு போலீஸ் அதிகாரி என்ற முறையில் நான் அவர்களிடம் சொன்னேன்... **“எனக்கு மதமில்லை, என்னுடைய ஒரே மதம் எனது போலீஸ் யூனிபார்ம் தான்”** என்று. அவர்களது எல்லா தந்திரங்களும் எங்களிடம் எடுபடாததால், அவர்களது குடும்பத்தார்களும், ஆதரவாளர்களும் மிரட்டவும் அச்சுறுத்தவும் செய்தார்கள். கம்புகளை எடுத்து வந்தார்கள். பயங்கரமாக கோஷமிட்டார்கள். மூவர்ணக் கொடியோடு ஊர்வலங்கள் நடத்தினார்கள். பல கிராமங்களுக்கான சாலைகளை அடைத்தார்கள். கடைசியில் நீதிமன்றத்தையும் மறித்தார்கள். ஜாமின் மனுக்கள் விசாரணைக்கு வரும்போதெல்லாம் வழக்கறிஞர்கள் கும்பலாக கோஷமிட்டு மிரட்டி அச்சுறுத்தினார்கள். நீதிமன்றத்திற்கு வெளியேயும் அச்சுறுத்தும் கும்பல்கள் நிறைந்திருக்கும். சில காவல் துறையினரும் குற்றவாளிகளுக்காகவே இருந்தார்கள். ஒருவிதமான சட்டமற்ற தன்மையையும் பீதியையும் நிறைத்து வைத்திருந்தார்கள்.

ஆனால், அமைதியாகவும் உறுதியாகவும், அர்ப்பணிப்புணர் வோடும் எங்கள் பணிகளைத் தொடர்ந்தோம். நீதித்துறையின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அனைத்துவிதமான ஆதாரங்களோடும் சாட்சிகளோடும் எங்களது விசாரணை நிறைவடைந்துள்ளதால், நீதி நிலைக்குமென நம்புகிறோம்.”

# நெய்வேலி அனல்மின் நிலைய முற்றுகைப் போராட்டம்





*தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பாக 10.4.2018 அன்று காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசைக் கண்டித்து நெய்வேலி அனல்மின் நிலைய முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.*

தமிழக வாழ்வுரிமைக் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், மே-17 இயக்கம், காஞ்சி மக்கள் மன்றம், மக்கள் அதிகாரம், த.மு.மு.க, தமிழ்தேசியப் பேரியக்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர் கட்சி, விவசாய சங்கங்கள் உள்ளிட்ட கட்சிகள் மற்றும் இயக்கங்களின் சார்பாக 50ஆயிரத்திற்கும் மேலான வர்கள் முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக புதுச் சேரியில் இருந்து லோகு. அய்யப்பன் தலைமையில் 100-க்கும் மேலான தோழர்களும், பெரியார் சிந்தனை மய்யம் சார்பில் தீனாவும் தோழர்களும் கலந்து கொண்டனர். விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து தோழர்கள் ந.வெற்றிவேல், க.இராமர், க.மதியழகன் உட்பட 30-க்கும் மேலான தோழர்களும் ஆத்தூரி லிருந்து மகேந்திரன், இராமு உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும் 300-க்கும் மேலான தோழர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றிய போது, "இந்த முற்றுகைப் போராட்டமானது காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான போராட்டம் மட்டும் அல்ல தமிழகத்தில் மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள நீட் தேர்வு, ஹைட்ரோ கார்பன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் உள்ளிட்ட நச்சுத் திட்டங்கள் மற்றும் மதக்கலவரத்தை தூண்டும் விதமாக வந்த இரதயாத்திரை உள்ளிட்ட அனைத்து இடர்ப்பாடுகளுக்கும் எதிரான தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டமாகும். மேலும் தமிழகத்தில் தற்போது நிலவுகின்ற பிரச்சினை களுக்கு மத்திய மாநில அரசுகள் நிரந்தர தீர்வு ஏற்படுத்தாவிட்டால் இப்படிப்பட்ட முற்றுகைப் போராட்டங்களுக்கு மாறாக காத்திருப்பு போராட்டம் மற்றும் சிறை நிரப்பும் போராட்டமாக தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பாக முன்னேடுப்போம்" என்று பேசினார்.

## அய்.பி.எல். போட்டிக்கு எதிராகக் கழகம் மறியல்



சென்னை சேப்பாக்கம் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியை நடத்தக் கூடாது என வலியுறுத்தி 10.04.2018 அன்று மாலை 5 மணியளவில் சென்னை அண்ணா சாலையில் சாலை மறியலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டத் தோழர்கள் ஈடுபட்டனர்.

## வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை தளர்த்தாதே! கோவையில் சாலை மறியல்



எஸ்.சி., எஸ்.டி. மக்களுக்கு எதிரான உச்ச நீதிமன்ற தீர்ப்பை திரும்ப பெறக்கோரி கோவை சமூக நீதிக்கான மக்கள் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் பங்கேற்றது.10.04.2018 அன்று நடைபெற்ற போராட்டத்துக்கு தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில துணைப் பொதுச்செயலாளர் சிவஞானம் தலைமை வகித்தார். திராவிடர் விடுதலைக் கழக மாநகரத் தலைவர் நேருதாஸ், தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில அமைப்புச் செயலாளர் ஆறுச்சாமி, ஆதித்தமிழர் கட்சி மாநிலத் தலைவர் வெண்மணி, ஆதித் தமிழர் பேரவை மாநில பொதுச் செயலாளர் நாகராஜ், தமிழ்ப் புலிகள் கட்சிப் பொதுச் செயலாளர் இளவேனில், சமூக நீதிக்கட்சி மாநிலத் தலைவர் பன்னீர்செல்வம் உள்பட 90-க்கும் மேற்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனையடுத்து போலீசார் அவர்களை குண்டு கட்டாகத் தூக்கி கைது செய்தனர்.

## பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நிலமோசடி : ரூ. 300 கோடியை சுருட்டிய 'ஆன்மிகவாதி' ராம்தேவ்!

*சாமியார் ராம்தேவ், 'பதஞ்சலி' என்ற தனது நிறு வனத்தின் மூலம் தரமற்ற பொருட்களை வியாபாரம் செய்து, நாட்டின் முக்கியமான பெருங் கோடீஸ்வரர்களில் ஒருவராக மாறியிருக்கிறார். குறிப்பாக, மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அவரது 'பதஞ்சலி' நிறுவனம் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற் றுள்ளது. கடந்த 2016-17ஆம் ஆண்டில் மட்டும் 'பதஞ்சலி' பொருட்கள் மூலம் சாமியார் ராம்தேவ் ரூ.9 ஆயிரம் கோடியை வாரிக் குவித்துள்ளார். இந்நிலை யில், நிலமோசடி மூலம் ரூ. 300 கோடி அளவிற்கு, மக்கள் பணத்தை, ராம்தேவ் விழுங்கி யிருப்பது தெரிய வந்துள்ளது. 2013இல் பாஜக ஆட்சிக்கு வரும் முன்புவரை, ஒரு ஆண்டு முழு வதுமே 1000 கோடிக்குத்தான் ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் வர்த்தகம் செய்து வந்தது. ஆனால் மோடி ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில் மட்டும் 950 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நிறுவனம் இலாபம் கண்டது. மொத்தமாக அந்த வருட இறுதியில் 2 ஆயிரத்து 100 கோடி ரூபாயாக அது உயர்ந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது பதஞ்சலி நிறுவனம் மிகவும் மோசமான நிலையில் தான் இருந்துள்ளது. தன்னிடமிருந்து நிலங்களை எல்லாம் விற்கும் அளவிற்கு அந்த நிறுவனம் போனது. ஆனால் பாஜக ஆட்சிக்கு வந்த பின்பு, படுவேகமான வளர்ச்சியை அடைந்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலத்தை விற்றது என்றால், மோடி ஆட்சியில் மாநிலம் தோறும் நிலங்களை வாங்கி குவித் துள்ளது. குறிப்பாக, பாஜக ஆளும் மாநிலங்களில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டுள்ளது. நில ஏலங்களில் பங்கேற்ற பதஞ்சலி நிறுவனத்திற்கு, நிர்ணயிக்கப் பட்ட ஏலத் தொகை பின்னர் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மொத்தமாக 300 கோடி வரை, மக்களின் வரிப்பணம் பதஞ்சலி நிறுவனத்திற்கு சூறை விடப்பட்டுள்ளது. மார்க்கெட் விலையைவிட 77 சதவிகிதம் குறைவாக, 2000 ஏக்கர் நிலம் வரை சாமியார் ராம்தேவ் வாங்கி இருக்கிறார். அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில்தான் பல நூறு ஏக்கர் நிலங்களை ராம்தேவ் வளைத்துள்ளார்.*

*ராம்தேவ் - மாநில பாஜக அரசுகள் இணைந்து நடத்திய இந்த முறைகேடுகளை, ராய்ட்டர்ஸ் என்று ஆங்கில ஊடகம் அம்பலப்படுத்தி யுள்ளது. பதஞ்சலி நிறுவனத் திற்கு, பாஜக ஆளும் மாநிலங் களில் எப்படி எல்லாம் உதவி அளிக்கப்பட்டு உள்ளது என்று கண்டுபிடித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.*

# பட்டியல் இன மக்களின் பாதுகாப்புச் சட்டத்தை சிதைத்த உச்சநீதிமன்றம்

***பட்டியலினப் பாதுகாப்புச் சட்டத்தைத் தளர்வுறச் செய்த உச்சநீதிமன்றத்தைக் கண்டித்து ஏப்.12, 2018இல் சென்னையில் மருத்துவர் எழிலன் தலைமையில் இளைஞர் இயக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆர்ப்பாட்டத்தில் நிகழ்த்திய உரை:***

பட்டியல் இன மக்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒரே பாதுகாப்புக் கவசமாக இருந்த வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்துவிட்டது உச்சநீதிமன்றம். சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற காரணத்தைக் கூறி சட்டம் தந்த பாதுகாப்புப் பிரிவுகளை தகர்த்து, உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வே சட்டத்தை மாற்றி எழுதிவிட்டது. மக்கள் பிரதிநிதிகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை இரண்டு பார்ப்பன நீதிபதிகள் தங்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப மாற்றி எழுதிக் கொள்ள முடிகிறது.

கோடானு கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு துரோகத்தை செய்துள்ள நீதிபதிகள் உதய்உமேஷ் லலித் மற்றும் ஆதர்ஷ் குமார் கோயல் - இருவருமே பார்ப்பனர்கள். இந்தியாவின் அதிகார மய்யமான உச்சநீதிமன்றத்தில் பட்டியல் இனத்தைச் சார்ந்த ஒருவர்கூட நீதிபதியாக இல்லை. 55 சதவீத நீதிபதிகள் பார்ப்பனர்கள். ஒரே ஒரு பெண் நீதிபதி. அவரும் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்.

இப்போது அமுலிலுள்ள வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அப்போது சட்டம் கொண்டு வரப்பட்டாலும் சட்டத்துக்கான நெறிமுறைககளை உருவாக்காமல் பார்ப்பன தலித் விரோத அதிகார வர்க்கம் 6 ஆண்டுகாலம் இழுத்தடித்தது. 1995இல் தான் நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு, சட்டம் அமுலுக்கு வந்தது. 2015இல் சட்டம் மேலும் வலிமையாக்கப் பட்டது. வன்கொடுமைகள் பட்டியல் மேலும் விரிவாக்கப்பட்டன. கட்டாயப்படுத்தி மொட்டை அடித்தல், செருப்பு மாலை அணிவித்தல், பாசன வசதிகளைத் தடுத்து நிறுத்துதல், கையினால் சாக்கடை-மலம் எடுக்க அனுமதித்தல், கோயிலுக்கு ‘தேவதாசி’களாக காணிக்கையாக்குதல், பில்லி சூன்யம் வைத்ததாகக் கூறி சமூகப் புறக்கணிப்பு செய்தல் போன்றவைகளும் வன்கொடுமைகளே என்று சட்டம் மேலும் வலிமையாக்கப்பட்டது. ஆனாலும் சட்டத்தை நிறைவேற்றும் காவல்துறை, அதிகார அமைப்புகளில் படிந்து நிற்கும் ஜாதிய உணர்வுகளால் இந்த சட்டம் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை. வன்கொடுமைக்கு உள்ளாகும் பட்டியல் - பழங்குடியினப் பிரிவினரில் 75 சதவீதம் பேர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சமூக மிரட்டலுக்கு பயந்து நீதி கேட்டுப் போராடுவதற்கே முன்வருவது இல்லை. மனித உரிமை இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள் முன்முயற்சி எடுத்து நடத்தும் வழக்குகள் மட்டுமே வெளிச்சத்துக்கு வருகின்றன.

இப்போது இந்த இரண்டு நீதிபதிகள் முன் வந்துள்ள வழக்கு என்ன? மகாரஷ்டிரா மாநிலத்தில் ‘காரத்’ மருந்தியல் கல்லூரியில் பணியாற்றிய பாஸ்கர் கெய்க் வார்ட் என்ற தலித் ஊழியர் பற்றி அவருக்கான இரகசியக் குறிப்பேட்டில் கல்லூரி முதல்வரும் பேராசிரியரும் அவரைப் பற்றிய மோசமான எதிர்காலத்தைப் பாழாக்குகிற கருத்துகளை எழுதி இருந்தனர். இவர்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய, உயர்அதிகாரியான மகாஜன் என்பவரிடம் பாஸ்கர் கெய்க்வாட் அனுமதி கேட்டார். மகாஜன் அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார். பிறகு மகாஜன் மீதே தலித் ஊழியர், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்தார். தன் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்யக்கோரி மகாஜன் மகாராஷ்டிரா உயர்நீதி மன்றத்தை அணுகினார். மகாராஷ்டிரா உயர்நீதிமன்றம் மகாஜன் மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகளடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு, ஒரு சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற காரணத்தைக் கூறி அந்த சட்டத்தையே இரத்து செய்துவிட முடியாது (The enforcement or implementation of the Act could not be thwarted merely because there was a possibility of the law being abused) என்றும் கருத்து தெரிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து உயர் அதிகாரி மகாஜன் (தொழில்நுட்பத் துறை இயக்குனர், பிறகு ஓய்வு பெற்றுவிட்டார்) உச்சநீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்தார். வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகளடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் 18ஆவது பிரிவு தந்த பாதுகாப்பை நீக்கம் செய்துவிட்டது. அதாவது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்துவிட்டால் முன் ஜாமீன் பெற முடியாது. இப்போது உச்சநீதிமன்றம் முன் ஜாமீன் வழங்கலாம் என்று கூறிவிட்டது. அத்துடன் இந்த சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்ட ஒரு அரசு ஊழியரை அவருக்கு பணி நியமன ஆணை வழங்கிய மேலதிகாரியின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இருந்தால் மட்டுமே கைது செய்ய முடியும்; மேலதிகாரி ஒப்புதல் தர மறுத்தால் கைது செய்ய முடியாது. அரசுப் பணியாளராக இல்லாத ஒருவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் புகார் பதிவானால் மாவட்ட காவல்துறை அதிகாரி ஒப்புதல் தந்தால்தான் கைது செய்ய முடியும். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு முன்பே புகார் உண்மையானதா? அல்லது முறைகேடாக தூண்டப்பட்டு தரப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, உண்மை என்று உறுதி செய்தால் மட்டுமே முதல் தகவல் அறிக்கையையே பதிய வேண்டும் - என்பது தான் இப்போது உச்சநீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு.

‘தீண்டாமை ஒழிக்கப்படுகிறது; தீண்டாமை சட்டப்படி குற்றம்” என்று அரசியல் சட்டத்தின் 17வது பிரிவு தீண்டாமை ஒழிப்பை அடிப்படை உரிமையாக்கியிருக்கிறது. இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாக்கவே 1989ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப் பட்டது. இந்தச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியது தான் உச்சநீதிமன்றத்தின் கடமை. ஆனால் உச்சநீதி மன்றம் சட்டத்தையே மாற்றி எழுதிக் கொண்டிருக் கிறது.

**வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்ததும் இதே அமர்வுதான்!**

நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த மகாஜன் கோரிக்கையே தன் மீது போடப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதுதான். சட்டத்தை அவர் கேள்வி கேட்கவில்லை. உச்சநீதிமன்றமோ வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தையே கேள்விக் குள்ளாக்கியிருக்கிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட ஒரு வழக்கு உண்மை யானதா அல்லது பொய்யாக புனையப்பட்டதா என்பதை விசாரிக்கும் உரிமை நீதிமன்றத்துக்குத்தான் உண்டு. அந்த உரிமையை வழக்குப் பதிவு செய்வதற்கு முன்பே காவல்துறைக்கு வழங்கிவிட்டது உச்சநீதி மன்றம்.

ஜாதிய உணர்வுகள் தலைவிரித்தாடும் காவல்துறை அதிகாரிகள் உச்சநீதிமன்றம் தங்களுக்கு வாரிக் கொடுத்துள்ள இந்த உரிமையை எப்படிப் பயன் படுத்துவார்கள் என்பது எல்லோருக்குமே தெரியும்.

லலித் மற்றும் கோயல் என்ற இந்த இரண்டு நீதிபதிகளின் அதே அமர்வுதான் கடந்த ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டத்தையும் நீர்த்துப் போகச் செய்யும் தீர்ப்பை வழங்கியது. (அர்னேஷ் குமார் எதிர் பீகார் அரசு) வரதட்சணை தடுப்புச் சட்டமான 498(ஏ)இன் கீழ் வழக்குகளை ‘எந்திரத்தனமாக’ப் பதிவு செய்யக் கூடாது. இந்தச் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்று இதே அமர்வு அப்போதும் கூறியது.

இந்த இரண்டு நீதிபதிகளுமே பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு 2014ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர்கள். மூத்த வழக்கறிஞர் கோபால் சுப்ரமணியத்தை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க ‘கொலிஜியம்’ வழங்கிய பரிந்துரையை நிராகரித்து, இந்த இரண்டு நீதிபதிகளையும் மோடி ஆட்சி பரிந்துரைத்தது. நீதிபதி லலித், பா.ஜ.க. தலைவர் அமீத்ஷா மீதான போலி என் கவுண்டர் வழக்கில் அமித்ஷாவுக்காக வழக்காடியவர். 2ஜி வழக்கில் அரசுத் தரப்பில் வாதாட சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டவர். மக்கள் சேவை செய்து வந்த மருத்துவர் பினாயக்சென், தேசத் துரோக வழக்கில் கைது முறைக்கேடாக செய்யப்பட்டபோது, அவருக்குப் பிணை வழங்கக் கூடாது என்று அரசு தரப்பில் வாதாடுவதற்கு சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டவர், இந்த நீதிபதி லலித்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பு வழக்கறிஞர், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை சீர்குலைக்கக் கூடாது என்பதற்கான அழுத்தமான வாதங்களையும் முன் வைக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

2014ஆம் ஆண்டு மத்திய சமூகநலத் துறை அமைச்சகம் வன்கொடுமை தடுப்புச் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தாமல் தடுப்பதற்கு அந்தச் சட்டத்திலே பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்க்க வேண்டும் என்று கூறியிருந்ததை இப்போது உச்சநீதி மன்றம் தனது தீர்ப்புக்கு சாதகமாக எடுத்துக் காட்டி யிருக்கிறது. சமூக நலத் துறையின் இந்த பரிந்துரையை நாடாளுமன்ற நிலைக் குழு ஏற்கவில்லை. நாடாளுமன்ற நிலைக் குழு நிராகரித்த ஒரு கருத்தை உச்சநீதி மன்ற நீதிபதிகள் தங்களுக்கு சாதகமாக முறைகேடாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நிலைநாட்ட நீதிமன்றம் முறைகேடாக செயல்பட் டிருக்கிறது. உண்மையில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும் உரிமை சமூக நலத் துறைக்குக் கிடையாது. உள்துறை அமைச்சகம் தான் கருத்து தெரிவிக்க முடியும்.

ஓய்வு பெற்ற அய்.ஏ.எஸ். அதிகாரியும், மண்டல் பரிந்துரை உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றி யவரும், 2015 வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் விரிவாக்கத்துக்கான வரைவுகளைத் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றியவருமான பி.எஸ். கிருஷ்ணன், இந்தத் தீர்ப்புக்குப் பிறகு, மத்திய சமூக நலத்துறை அமைச்சர் தாவர் சந்த் கெலோட் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற பொத்தாம் பொதுவான முடிவுக்கு வந்துவிட முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

வன்கொடுமை தடுப்புச் சட்டம் - தலித் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம். சமூகத்தில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, வலிமையற்ற சமூகமாக உழலும் சமூகத்துக்கு இந்த சட்டம் தரும் பாதுகாப்பை கவனத்தில் கொள்ள வேண்டும். குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று தள்ளுபடி செய்யும் வழக்குகள் எல்லாவற்றையுமே பொய்யான வழக்குகள் என்று கூறிட முடியுமா? கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூட குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலையா கிறார்கள். அதற்காகக் கொலையே நடக்கவில்லை என்று கூற முடியுமா?” என்று கேட்டுள்ளார் பி.எஸ்.கிருஷ்ணன்.

தீண்டாமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப் படும் வழக்குகளில் விசாரணைகள் திட்டமிட்டுக் கிடப்பில் போடப்படுகின்றன. நீண்ட கால தாமதத்தைப் பயன்படுத்தி வழக்குத் தொடுத்தவர்கள், சாட்சிகள் மிரட்டப்படுகிறார்கள். அவர்கள் அச்சத்தின் பிடியில் வாழ வேண்டியிருக்கிறது. 1929ஆம் ஆண்டு சைமன் ஆணையம் இந்தியா வந்தபோது டாக்டர் அம்பேத்கர் அளித்த மனுவில் பட்டியல் இனமக்கள் அச்சத்தின் பிடியில் வாழ்வதை சுட்டிக்காட்டியிருந்தார். இந்தக் கண்ணோட்டத்தில் தான் 2015ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தம் மேலும் கடுமையாக்கப்பட்டது என்றும் பி.எஸ். கிருஷ்ணன் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக் கிறார்.

ஜாதியற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்ற அம்பேத்கர் இலட்சியத்துக்கு வன்கொடுமை தடுப்புச் சட்ம் தடையாக இருக்கிறது என்று தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பது தான் இன்னும் கொடுமையானது. இடஒதுக்கீடு கொள்கையால்தான் ஜாதி மேலும் வளருகிறது என்று இடஒதுக்கீடு எதிர்ப்பாளர்கள் கூறும் அதே வாதத்தை இப்போது உச்சநீதிமன்றமும் பிரதிபலிக் கிறது. தலித் மக்கள் வாழ்வுரிமை உறுதியாக்கப்படும் போதுதான் அவர்கள் சமூக நீரோட்டத்திலே பயணிக்க முடியும். அத்தகைய

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அம்பேத்கர் சிலைக்கு கழகத்தினர் மாலை

**திருப்பூர் :** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 127 வது பிறந்த நாள் விழா 14.04.2018 சனிக் கிழமை காலை 10.00 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி எதிரில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கரின் சிலை அருகே நடைபெற்றது.

கழக பொருளாளர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் புரட்சியாளரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கவிஞர் கனல் மதி வாசிப்பில் கழகத் தின் 'ஜாதி ஒழிப்பு உறுதிமொழி' ஏற்பு கழகத் தோழர்களால் ஏற்கப்பட்டது. நிகழ்வின் இடையே பெரியார் பிஞ்சுகள் யாழினி, முத்தமிழ் ஆகி யோரின் பிறந்த நாள் அவ்விடத் திலேயே கேக் வெட்டி கொண்டாடப் பட்டது. அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

கழகத்தின் மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாநில அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி, மாவட்டக் கழகச் செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகர பொறுப்பாளர் மாதவன், மாணவர் கழக தேன்மொழி, இணைய தள பொறுப்பாளர் விஜயகுமார், மாநகர அமைப்பாளர் ராமசாமி, பரிமள ராஜன் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துக் கொண்டனர்.

**விருதுநகர் :** புரட்சியாளர் அம்பேத்கரின் 127 வது பிறந்த நாளை முன்னிட்டு 14.04.2018 சனிக்கிழமை காலை விருதுநகர் மாவட்டத்திலுள்ள வடமலைக்குறிச்சி யில் அம்பேத்கர் படத்திற்கு ஆசிரியர் செயக்குமார் தலைமையில் மரியாதை செலுத்தி பேசி முடித்தவுடன் சத்தி ரெட்டியா பட்டிலுள்ள அம்பேத்கர் சிலைக்கு சாதி ஒழிப்பு, மத மாய்ப்பு முழக்கங் களுடன் மாலை அணிவித்தோம். திவிக, திக, திமுக, காங்கிரஸ், ஆதித் தமிழர் கட்சி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை :** டாக்டர்.அம்பேத்கர் பிறந்த நாளான்று (14.04.2018) காலை 8 மணிக்கு சேத்துபட்டு பகுதியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் உருவச்சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதை தொடர்ந்து திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்பு, அம்பேத்கர் மணிமண்ட பம், மயிலாப்பூர், இராயப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் உருவச்சிலை மற்றும் படங்களுக்கு மாலை அணிவித்து, முழக்கங்களோடு மரியாதை செலுத்தப் பட்டது. கழகத் தோழர்கள் பலரும் வந்திருந்து மரியாதை செலுத்தினர்.

**நாமக்கல் :** ஏப்ரல் 14, காலை 9 மணிக்கு நாமக்கல் மாவட்டம் திருச் செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வைரவேல் உட்பட நகர பொருப் பாளர்கள் மற்றும் நகர தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை :** திராவிடர் விடுதலைக் கழகம் மதுரை மாவட்டத்தின் சார்பில் 14.04.2018 அன்று காலை அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணி விக்கப்பட்டு மரியாதை செலுத்தப் பட்டது. மாமேதை அம்பேத்கர் பிறந்த நாளில் சாதி ஒழிப்பு மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வலியுறுத்தியும் முழக் கங்கள் எழுப்பப்பட்டன. இந்நிகழ்வில் தமிழ்த் தேச மக்கள் முன்னணி, திவிக, தபெதிக, நாணல் நண்பர்கள், குறிஞ்சியர் விடுதலை இயக்கம், இளந்தமிழகம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன.

**காஞ்சிபுரம், கோவை, சேலம், விழுப்புரம் :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் காஞ்சிபுரம், கோவை, சேலம், விழுப்புரம் மாவட்டங்களில் 14.04.2018 அன்று காலை அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு கழகப் பொறுப்பாளர்கள், தோழர் களால் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## உச்சநீதிமன்றத்தில் அதிகரிக்கும் அரசின் தலையீடுகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம் வரும்போது தான் ஜாதி ஒழிப்பு என்ற இலக்கை நோக்கியே பயணிக்க முடியும் என்ற அடிப்படைப் புரிதல் இல்லாமல் 'பார்ப்பனக் கண்ணாடி' போட்டுக் கொண்டு தீர்ப்பு எழுதுகிறது உச்சநீதிமன்றம்.

இந்த வழக்கில் குற்றவாளிகள் ஏன் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்பதை நடைமுறை யிலிருந்தும் சமூக அதிகார மய்யங் களின் ஜாதியப் பார்வையிலிருந்தும் அணுகவேண்டிய நீதிமன்றம். 'எந்திரத்தனமாக' சட்டம் முறை கேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற முடிவுக்கு எப்படி வர முடியும்? உண்மையில் சட்டம் எந்திரத்தனமாக செயல்படுகிறது என்பதைவிட நீதிமன்றம் தான் எந்திரத்தனமாக செயல்பட்டிருக் கிறது.

இந்தச் சட்டத்தின் பிரிவுகளேகூட இன்னும் முழுமையாகப் பின்பற்றப் படவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அப்படி எந்த இழப்பீடும் வழங்கப்படுவதே இல்லை. (உ.பி.யில் மாயாவதி முதல்வராக இருந்தபோது மட்டும் இதை நடை முறைப்படுத்தினார்)

வன்கொடுமைத் தடுப்புச் சட்டங் களின் கீழான வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனால் பல மாநில ஆட்சிகள் சிறப்பு நீதிமன்றங்களை உருவாக்கவே இல்லை. 2015ஆம் ஆண்டு சமூகநலத் துறையின் அறிக்கையின்படி பீகார், உ.பி., ம.பி., மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், குஜராத், ஜார்க்கண்ட், கருநாடகம், ஒடிசா, தமிழ்நாடு, தெலுங்கானா மாநிலங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப் படவே இல்லை.

உச்சநீதிமன்றம் வழங்கும் இத்தகைய தீர்ப்புகளுக்குப் பின்னால், மத்திய அரசின் கை இருக்கிறது என்ற சந்தேகத்தையும் நிராகரிக்க முடியாத சூழல்தான் நிலவுகிறது. உச்சநீதி மன்றத்தில் அரசின் தலையீடு இருப்பதையும் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அரசின் தலையீட்டுக்குப் பணிந்து போவதையும் தலைமை நீதிபதிக்கு அடுத்த நிலையில் உள்ள நீதிபதி செலமேஸ்வர் வெளிப்படை யாகவே பேசி வருகிறார். கடந்த ஜனவரி 12ஆம் தேதி வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் அமர்வை தேர்வு செய்வதில் தலைமை நீதிபதி வெளிப்படையாக இல்லை என்று நான்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளே பேட்டி அளித்தார்கள். இப்போது மீண்டும் செலமேஸ்வர் தலைமை நீதிபதிக்கும், உச்சநீதிமன்ற நீதிபதி களுக்கும் கடிதங்களை எழுதியுள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் 'கொலிஜியம்' (நீதிபதிகள் தேர்வுக் குழு) பரிந் துரைத்த நீதிபதிகளுக்கு மத்திய சட்ட அமைச்சகம் ஒப்புதல் தர மறுப்ப தோடு நீதித் துறையிலும் குறுக்கிட்டு உத்தரவு களைப் பிறப்பிக்கின்றன.

உத்தரகாண்ட் உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள கே.எம். ஜோசப்பை உச்சநீதிமன்ற நீதிபதி யாக்க 'கொலிஜியம்' பரிந்துரைத்தது. ஆனால் உத்தரகாண்ட் அரசை மத்திய அரசு கலைத்தபோது, கலைத்தது செல்லாது என்று தீர்ப்பளித்தார் என்ற காரணத்துக்காக ஜோசப் பதவி உயர்வை ஏற்பதற்கு சட்ட அமைச்சகம் மறுத்து வருகிறது.

கருநாடக மாநிலத்தில் மாவட்ட நீதிபதியாக உள்ள கிருஷ்ணபட்டை மாநில உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு 'கொலிஜியம்' இரண்டு முறை பரிந்துரைத்தும், அவர் நீதிபதியாக முடியாமல் மத்திய சட்ட அமைச்சகம் முட்டுக்கட்டைப் போட்டு வருகிறது. இந்த நீதிபதி மீது குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கூறி, விசாரணை நடத்த மத்திய சட்ட அமைச்சகம் கருநாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தினேஷ் மகேஸ்வரிக்கு உத்தரவிடு கிறது. தலைமை நீதிபதியும் உத்தரவுக்கு கீழ் பணிந்து செயல்படுகிறார். நீதிபதிகள் உச்சநீதிமன்றக் கட்டுப் பாட்டின்கீழ் இருக்கும்போது அரசு எப்படி நேரடியாக உத்தரவிடலாம் என்று நீதிபதி செலமேஸ்வர் கேட் கிறார். இத்தனைக்கும் கிருஷ்ணபட் மீதான புகார்களை உச்சநீதிமன்றம் ஏற்கனவே விசாரித்து அவர் மீதான புகார்கள் உண்மையல்ல என்று உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஜெயலலிதா மீதான ஊழல் வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பு ஒரு வருடம் வரை வெளியிடாமல் நிறுத்தியது ஏன் என்றும் தலைமை நீதிபதியிடம் கேட்கிறார் செலமேஸ்வர்.

உச்சநீதிமன்றமே அதற்குரிய சுதந்திரத்துடன் செயல்படாமல் மத்திய அரசுப் பிடிக்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. இந்தப் பின்னணியில்தான் வன் கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழங்கிய தீர்ப்பையும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது என்றார் விடுதலை இராசேந்திரன்.

**கோபி கழக மகளிர் மாநாட்டுச் செய்திகள் அடுத்த இதழில்**

## கடலூரில் கழகக் கலந்துரையாடல்



15.04.2018 அன்று கடலூர் மாவட்ட திராவிடர் விடுதலை கழகம் சார்பாக கலந்துரையாடல் கூட்டம் கருவேப்பிலங்குறிச்சி அருகில் பேரளையூர் கிராமத்தில் ஆசிரியர் அறிவழகனின் மிகச் சிறப்பான ஒருங்கிணைப்பில் கடலூர் மாவட்ட செயலாளர் நடபாரதிதாசன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், விழுப்புரம் கிழக்கு மாவட்ட செயலாளர் பூ.ஆ.இளையராசன் சிதம்பரம் நகர செயலாளர், மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டு அமைப்பு குறித்தும், பெரியார் அம்பேத்கர் குறித்தும் சிறப்பான கருத்துக்களை முன் வைத்தனர். நேமம், வண்ணான்குடிகாடு, கருவேப்பிலங்குறிச்சி, பேரளையூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 20 புதிய தோழர்கள் அமைப்பில் இணைந்தனர். மாவட்ட, ஒன்றிய கிளைக் கழக, மாணவர் கழகப் பொறுப்புகள் நியமனம் பற்றியும், கழகத் தலைவரை அழைத்து பொதுக் கூட்டம் நடத்துவது பற்றியும், புரட்சிப் பெரியார் முழக்கம் மற்றும் நிமிர்வோம் சந்தா சேர்ப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. முத்து நன்றியுரை கூறிய பின் கூட்டம் முடிவு பெற்றது.

**கழகக் கொடி தேவைப்படுவோருக்கு**

திராவிடர் விடுதலைக் கழகக் கொடி தேவைப்படும் தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் : 7299230363 - கொடி அளவு : 3 X 2 விலை: ரூ.80/ (ரூபாய் எண்பது மட்டும்)

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
ஆண்டுக்கட்டணம் **ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th April 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN